1990 மார்ச் 20]

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தனியார் நிர்வாகம் என்பது நூற்றுக்கு 90 இடங்களில் முறையாக இருந்தாலும் நூற்றுக்கு 10 இடங்களில்—விகிதாச்சார அளவில்தான் நான் சொல்லமுடியும்—சில குறைபாடுகளுக்கு ஆளாகிறது. ஆனால் குறைபாடுகளுக்கு ஆளானதற்குப் பின்னால் தொடர்ந்து அவர்களை—மாணவர்களைச் சேர்க்க அனுமதித்தால் அடுத்த ஆண்டு வகுப்பு உண்டு என்று சொன்னால் குறைபாட்டைக் களைய முடியாது. வேறு விதமான வழக்குகள் போட்டுக் கொண்டிருப்பதைவிட, அவர்கள் அந்தப் பள்ளியை நடத்துகிற அந்தத் தொடர்ச்சியைத் தடை செய்வதற்கு முயற்சிப்பதைத் தவிர சமூக நீதி கிடைப்பதற்கு வேறு வழி கிடையாது.

தபால் ஓட்டு.

*7584—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

ஓட்டுப் பெட்டிகளைக் காவல் செய்யவும், பாதுகாப்புக்கும் செல்லும் காவலர்களுக்குத் தபால் ஓட்டு கொடுக்கப்படுமா?

(9-15 மணி)

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாடாளுமன்றம் மற்றும் சட்டப் பேரவைத் தேர்தலின்போது பாதுகாப்புப் பணிக்காக நியமிக்கப்படும் காவலர்கள் வாக்களிக்கத் தேர்தல் விதிகள் உரிமை வழங்கியுள்ளது. இத்தகைய காவலர்கள் பணிபுரியவேண்டிய இடம், அவர்கள் வாக்காளராகப் பதிவு செய்யப்பட்டுள்ள தொகுதியில் அமைந்தால், பணிச்சான்றிதழின் அடிப்படையில்—அவர்கள் இன்ன வேலைபார்க்கிறார்கள் என்ற சான்றிதழின் அடிப்படையில்—பணிபுரியும் அதே வாக்குச்சாவடியில் வாக்களிக்கலாம். எந்த இடத்திற்குப் பணிக்குச் செல்கிறார்களோ, அந்த வாக்கு சாவடியில் அவர்கள் பெற்றிருக்கிற பணிச் சான்றிதழைக் காட்டி வாக்களிக்கலாம், அதே தொகுதியாக இருப்பார்களேயானால், பணிபுரியும் இடம் வாக்காளராகப் பதிவு செய்யப்பட்டுள்ள தொகுதிக்கு வெளியே அமைந்தால், அஞ்சல் வாக்குச் சீட்டின் மூலம் வாக்களிக்கலாம். பணிச் சான்றிதழைப் பெறவும், அஞ்சல் வாக்குச் சீட்டைப் பெறவும் குறிப்பிட்ட கால நேரத்திற்குள் உரிய தேர்தல் படிவத்தில் தேர்தல் நடத்தும் அதிகாரிக்கு விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பங்கள் சரியாகவும் முழு விவரங்களையும் கொண்டு குறிப்பிட்ட காலநேரத்தில் கிடைத்தால், தேர்தல் நடத்தும் அதிகாரி பணிச் சான்றிதழையோ அல்லது அஞ்சல் வாக்குச் சீட்டையோ காவலருக்கு அனுப்பி வைப்பார். விண்ணப்பிக்கத் தவறியவர்களுக்கு, அஞ்சல் வாக்குச்

சீட்டோ அல்லது தேர்தல் பணிச் சான்றிதழோ தேர்தல் நடத்தும் அதிகாரி தானாகவே அளிக்கத் தேர்தல் விதிகள் அனுமதிக்கவில்லை.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அநேக காவலர்களுக்கு இன்னும் அந்த உரிமை இருப்பதே தெரியாமல் இருப்பதால்தான் இந்த வினாவையே நான் தொடுத்தேன். தபால் ஓட்டு வாங்கியவர்களுடைய வாக்கு களை அந்தத் தொகுதியிலுள்ள மற்றவர்கள் போட்டுவிடுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று நான் அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வியினுடைய கருத்து இங்கு நான் சொன்ன விடையின் அடிப்படையிலே எழுவதாக இல்லை; குழப்ப மாக இருக்கிறது.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தபால் ஓட்டு வாங்கியவர்களது வாக்குகளை அந்தத் தொகுதியிலுள்ள மற்றவர்கள் போட்டுவிடுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தபால் ஓட்டு வாங்கியவர்கள், அவர்கள் கையொப்பம் இட்டு ஒரு கவரில் வைத்து, அதற்குள் மற்றொரு கவரில் வாக்குச்சீட்டை வைத்து நேரடியாக அதிகாரிகளுக்கு அனுப்ப வேண்டும். ஆகவே, அதை மற்றவர்கள் போடுவது என்கின்ற பிரச்சினை எழுவதாக எனக்குத் தெரியவில்லை.

திரு. மு. இராமநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்றபோது, பொதுவாக வாக்குபெட்டிகளைக் காப்பதற்கும், போலிங்பூத்திலே பந்தோபஸ்துக்கும் நிற்கக்கூடிய காவலர்களுக்குச் சில விதிமுறை களுக்கு உட்பட்டு வாக்குகள் போடுவதற்கு உண்டான வாய்ப்புகள் இருக்கின்றன என்று குறிப்பிட்டார்கள். ஆனால் தேர்தல் பணிகள் ஆற்றுகின்ற ரிட்டனிங் ஆபீசர் உள்ளிட்ட பல அதிகாரிகளுக்கு முன்கூட்டியே இன்னின்ன இடத்தில் நீங்கள் வேலைக்குப் பணிக்கப்பட்டிருக்கிறீர்கள் என்கின்ற அறிவிப்பு வந்து விடுவதால் அவர்கள் போஸ்டல் ஓட்டு போடுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. காவலர்களைப் பொறுத்த அளவிலே அடுத்த தொகுதியோ அல்லது சம்பந்தப்பட்ட தொகுதிகளிலோ வாக்களிப்பதற்கு—ஹெட் ஆப் தி டிபார்ட்மெண்டிலே இருந்து அவர்களுக்கு எப்போது போஸ்டிங்ஸ் போடுவார்கள் என்று தெரிந்துகொள்ள முடியாத நிலை இருக்கின்ற காரணத்தினாலே, இந்த வாய்ப்புகளைப் பயன்படுத்தி ஓட்டு போடுவதற்கு அவர் களுக்குச் சந்தர்ப்பம் இல்லை. ஆகவே முறையாக இந்தக் காவலர் களைப் பொறுத்த அளவில், டியூட்டி இன்ன இடத்தில்தான் போடு

1990 மார்ச் 20]

கிறோம் என்பதை முன்கூட்டியே தெரிவிக்கக்கூடிய அளவிலும், அவர்கள் வாக்குப் பதிவு செய்கின்ற அளவிலும், அரசு உத்தரவு பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தல் விதிமுறைகளுக்கு உட்பட்டு அரசினுடைய துறையைச் சேர்ந்தவர்கள் இப்படிப்பட்ட பணிகளுக்கு நியமிககப்படுகின்ற நேரத்தில் எந்த வகையில் முன்கூட்டி அவர்களுக்கு அறிவிக்கலாம்; அவர்களுடைய தொகுதியிலே இல்லாமல் வேறு தொகுதியிலே பணியாற்றினாலும் அவரவர்கள் வாக்கு அளிக்கக்கூடிய அதே தொகுதியிலே பணியாற்றினாலும் இரண்டு முறை வைக்கப்பட்டிருக்கிறது. அந்த இரண்டு முறைப்படியும், குறிப்பாக காவலர்களுக்கு வாக்களிக்கிற வாய்ப்பு தவறிப் போகாமல் இருப்பதற்கு காவல்துறை மேலதிகாரிகள் என்ன நடவடிக்கை எடுத்து அந்த வாக்குச் சீட்டைப் பெறமுடியும் என்பது பரிசீலிக்கப் படவேண்டும், ஆனால் தேர்தல் ஆணைக் குழு விதித்திருக்கிற விதிகளுக்கு உட்பட்டு நாம் செய்யக்கூடிய முறையில் அதை வெறும் வாய்ப்பாக இல்லாமல் அந்த உரிமை காப்பாற்றப் படுவதற்கு வழி காண முயற்சிக்கலாம்.

திரு. மீ. அ. வைத்தியலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாகவே தேர்தல் காலங்களிலே பணிக்குச் செல்கின்ற ஊழியர்களுக்கு அவர்கள் மனுச் செய்திருந்தாலும்கூட வாக்குச் சீட்டுகள் உரிய நேரத்தில் கிடைக்கப் பெறுவதில்லை என்ற குறை அரசு அலுவலர்கள் மத்தியிலே இருக்கிறது. எனவே எந்த இடத்திற்கு அவர்கள் பணிக்குச் செல்கிறார்களோ அந்த இடத்தில், அவர்கள் இருக்கிற இடத்தில் வாக்காளர் பட்டியலிலே அவர்கள் இடம் பெற்றிருப்பார்களேயானால், அவர்கள் ஓட்டுப் போடலாம் என்கின்ற அளவிற்குச் சட்டத்தைத் திருத்த அரசு சிபாரிசு செய்யுமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

(9-20 மணி).

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: பேரவைத் தலைவர் அவர்களே, வாக்காளர் பட்டியலில் ஏற்கெனவே பெயர் இல்லாத ஒருவர் தன்னுடைய வாக்கைப் பதிவு செய்ய வேண்டுமானால், தனியாக உரிமை அனுமதிச் சீட்டு பெற்றுத்தான் பதிவு செய்ய வேண்டும். தொகுதியின் வாக்காளர் பட்டியலில் பெயர் இல்லாத ஒருவர் அந்த இடத்தில் ஓட்டுப் போடுவது முறையல்ல. ஆனால் தேர்தல் பணிக்குச் செல்லும் அலுவலர்கள் அவரவர்களுடைய பணியிடத்தைப் பொறுத்து, முன்கூட்டியே அனுமதி பெற்று வாக்கு அளிக்கலாம் என்று விதிக்கப்பட்டிருக்கிறது. அதை அவரவர்களே நிறைவேற்ற வேண்டும்.

திரு. யூ. கே. வெள்ளியங்கிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறையைச் சார்ந்தவர்கள் மட்டுமல்லாமல், ரிட்டர்னிங் ஆபிசர்களாக தேர்தல் பணிகள் பெறுகிற அத்தனை பேருக்கும் காலாகாலத்தில் அவர்களது பணிகுறித்து முன்கூட்டியே

குறிப்பிடாமல், கடைசி நேரத்தில் டூட்டி கொடுக்கிற வாய்ப்பு பல நேரங்களில் இருப்பதாகப் புகார்கள் கூறப்படுகின்றன, எனவே குறிப்பிட்ட காலத்திற்கு முன்பாகவே அவர்களுக்கு டூட்டி நேரத்தைக் கொடுத்துவிட்டால், அதையொட்டி அவர்கள் வாக்குப் பதிவு செய்ய வாய்ப்பு ஏற்படும். அவ்வாறு செய்வதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க அன்பழகன்: தேர்தல் பணி கொடுக்கப் படுவது என்பது கட்டாயமான பணி, அது அரசாங்கத்தின் கட்டளை. வாக்குப் போடுவது என்பது அவரவருடைய உரிமை என்ற காரணத்தால், அந்த உரிமையைப் பெற்றுக் கொள்ள வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கின்றது. எந்தத் தேதியில் தேர்தல் பணி ஆணை பிறப்பிக்கப்படுகிறதோ, அந்தத் தேதியில் முன்னதாகவே குறிப்பிட்ட தொகுதியின் தேர்தல் அதிகாரிகளுக்கு விண்ணப்பித்து தங்கள் வாக்குகளைப் பதிவு செய்யலாம். தேர்தல் அதிகாரியாகப் பணியாற்றும் இடம் தங்கள் தொகுதிக்குள்ளேயே இருந்தால் அவர் பணியாற்றுகிற இடத்திலேயே வாக்களிக்க முடியும், வேறு தொகுதியில் பணியாற்றுகிற நிலைமை ஏற்பட்டால் அந்த வாக்குச்சீட்டைத் தபால் மூலமாக அனுப்பவாய்ப்பு இருக்கிறது. அதை மனு மூலமாகப் பெற்றுக்கொள்ளவும் இடம் இருக்கிறது. வேறு குறைகள் இருந்தால் அதைக் கவனிக்கலாம்.

தாலுகா அமைத்தல்

*3027—திரு. மொஞ்சனூர் ப. ராமசாமி:

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

அரவக்குறிச்சி, பரமத்தி ஒன்றியங்களை சேர்த்து ஒரு தனி தாலுகா ஆக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: பேரவைத் தலைவர் அவர்களே,

அரவக்குறிச்சி மற்றும் க. பரமத்தி ஒன்றியங்களை சேர்த்து புதிய அரவக்குறிச்சி வட்டம் ஏற்படுத்தும் பரிந்துரை அரசிடம் உள்ளது.

திரு. மொஞ்சனூர் ப. ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசிடம் பரிந்துரை உள்ளது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். எவ்வளவு காலத்திற்குள் அது நிறைவேற்றப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டங்களைப் பிரித்து அமைக்கப்படுவது குறித்து பரிந்துரை செய்ய ஏற்படுத்தப்பட்ட வல்லுநர் குழு திருச்சி மாவட்டத்தைப் பிரித்து அமைப்பது குறித்த அறிக்கையை அரசுக்குச் சமர்ப்பித்துள்ளது. அந்த அறிக்கையில் கரூர் வட்டத்தைப் பிரித்தமைத்து கே. பரமத்தி, அரவக்குறிசசி ஒன்றியங்களை ஏற்படுத்தி புதியதாக அரவக்குறிச்சி வட்டத்தை ஏற்படுத்தும் பரிந்துரை உள்ளது. திருச்சி மாவட்டத்தைப் பிரித்து அமைப்பது குறித்து 1990-91 ஆம்